RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-4 இதழ்-44 15 பிப்ரவரி சனிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

## தவெக தலைவர் விஜய்க்கு 'ஒய்' பிரிவு பாதுகாப்பு மத்திய உள்துறை உத்தரவு

சென்னை, பிப்.15



தவெக தலைவர் விஜய்க்கு 'ஒய்' (சீ) பிரிவு பாதுகாப்பு அளித்து மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. நாட்டில் உள்ள அரசியல் கட்சித் தலைவர்கள், தொழிலதிபர்கள், நடிகர்கள், பிரபலங்களுக்கு உளவுத் துறையின் அறிக்கையின் அடிப்படையில் மத்திய அரசு 'ஒய்', 'இசட்' எனப் பல்வேறு பிரிவுகளின் கீழ் பாதுகாப்பு வழங்குகிறது. அந்த வகையில் தவெக தலைவர் விஜய்க்கு 'ஒய்' (Y) பிரிவு பாதுகாப்பு அளிக்க மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி 8 முதல் 11 பேர் கொண்ட துப்பாக்கி ஏந்திய மத்திய ரிசர்வ் படையைச் சேர்ந்த கமாண்டோக்கள் சுழற்சி முறையில் விஜய்யின் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவார்கள் எனத் தெரிகிறது.

கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 'தமிழக வெற்றி கழகம்' என்ற பெயரில் நடிகர் விஜய், புதிய கட்சி தொடங்கினார். அவர் கட்சித் தொடங்கி சில மாதங்களிலேயே மக்களவைத் தேர்தல் வந்தாலும் கூட அதில் போட்டியும் இல்லை யாருக்கும் ஆதவும் இல்லை என்ற நிலைப்பாட்டுடன் இயங்கத் தொடங்கினார்.

தொடர்ச்சியாக கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாடு விழுப்புரம் விக்கிரவாண்டி அருகே உள்ள வி.சாலையில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் அவருடைய பேச்சு கவனம் பெற்றது. முதல் மாநாட்டிலேயே ஆளும் திமுகவை மிகக் கடுமையாக விமர்சித்தார். ஆனால் மத்திய அரசை அதே வீச்சுடன் அவர் விமர்சிக்கவில்லை. அன்று அவர் பேசியவிதம், தொடர்ந்து அவர் காட்டும் திமுக எதிர்ப்பு நிலைப்பாடு ஆகியன அவர் பாஜகவின் நிழலில் செயல்படுகிறார் என்ற விமர்சனங்களையும் ஈர்த்துள்ளது.

இந்நிலையில் விஜய், தேர்தல் வியூக வகுப்பாளர் பிரசாந்த் கிஷோரை சந்தித்துள் ளார். அவருடைய அரசியல் நகர்வுகள் அவர் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் தீவிரம் கொண்டுள்ளதைக் காட்டுகிறது.

விஜய் அறையிலிருந்து கொண்டே அரசியல் செய்கிறார் என்று அவர் மீதான விமர்சனங்கள் தற்போது வலுக்கும் சூழலில் வரும் ஏப்ரல், மே மாதங்களில் விஜய் தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொள்வார் என்றும் கூறப்படுகிறது. இந்நிலையில், விஜய்க்கு 'ஒய்' (Y) பிரிவு பாதுகாப்பு அளித்து மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. இந்தப் பாதுகாப்புப் பிரிவினர் தமிழகத்துக்குள் விஜய் எங்கு சென்றாலும் அவருடன் பாதுகாப்புக்காகச் செல்வார்கள் எனக் கூறப்படுகிறது.

## சீமான் மீதான பாலியல் குற்றச்சாட்டு வழக்கு போலீஸார் நடவடிக்கை குறித்து நீதிமன்றம் கேள்வி

சென்னை, பிப்.15



சீமான் மீது கடந்த 2011ம் ஆண்டு பதியப்பட்ட பாலியல் குற்றச்சாட்டு வழக்கில் இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என வளசரவாக்கம் போலீஸாருக்கு உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப் பாளரான சீமானுக்கு எதிராக நடிகை விஜயலட்சுமி கடந்த 2011ம் ஆண்டு வளசரவாக்கம் போலீசில் பாலியல் புகார் அளித்தார். அதில், தன்னை திருமணம் செய்து கொள்வதாகக்கூறி பாலியல் ரீதியாக சீமான் வன்கொடுமை செய்து ஏமாற்றி விட்டதாக தெரிவித்திருந்தார்.

இந்த புகாரின்பேரில் சீமான் மீது கடந்த 2011 ம் ஆண்டு பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் போலீஸார் வழக்குப்பதிவு செய்திருந்தனர். இதற்கிடையே சீமானுடன் சமரசம் ஏற்பட்டுவிட்டதாக கடந்த 2012ம் ஆண்டு விஜயலட்சுமி போலீஸாரிடம் கடிதம் அளித்தார். மீண்டும் அவர்களுக்கிடையே பிரச்னை ஏற்பட்டதால் விஜயலட்சுமி மீண்டும் போலீஸில் புகார் அளித்தார்.

ரத்து செய்யக்கோரி சீமான் மனு: இந்நிலையில் விஜயலட்சுமி அளித்த புகாரின்பேரில் தன் மீது பதியப்பட்ட வழக்கை ரத்து செய்யக்கோரி சீமான் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனு மீதான விசாரணை நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, சீமான் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் எஸ்.சங்கர், இந்த வழக்கின் விசாரணையை வேறு தேதிக்கு தள்ளிவைக்க வேண்டும் என்றார்.

அப்போது சீமானுக்கு எதிரான வழக்கு ஆவணங்களைப் படித்துப் பார்த்த நீதிபதி கடந்த 2011ம் ஆண்டு சீமானுக்கு எதிராக பதியப்பட்ட இந்த பாலியல் குற்றச்சாட்டு வழக்கில் இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என போலீஸாருக்கு கேள்வி எழுப்பினார். பின்னர் இந்த வழக்கு விசாரணையை வரும் பிப்.17க்கு தள்ளிவைத்துள்ளார்.

## தேனி அருகே சபரிமலை பக்தர்கள் சென்ற பேருந்து வேன் மோதி விபத்து: சிறுவன் உட்பட 3 பேர் உயிரிழப்பு

தேனி, பிப்.15



சபரிமலைக்கு சென்ற பேருந்து மற்றும் தரிசனம் முடித்து ஊர் திரும்பிக் கொண்டிருந்த வேன் தேனி அருகே நேருக்கு நேராக மோதியது. இதில் சிறுவன் உட்பட 3 பேர் உயிரிழந்தனர். 14க்கும் மேற்பட்டோர் பலத்த காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சேலம் மாவட்டம் இளம்பிள்ளை கிராமத்தைச் சேர்ந்த ஐயப்ப பக்தர்கள் நேற்று இரவு சபரிமலைக்கு தனியார் பேருந்தில் சென்று கொண்டிருந்தனர். அதே போல ஒசூரைச் சேர்ந்த ஐயப்ப பக்தர்கள் வேன் சபரிமலையில் தரிசனம் முடித்து ஊர் திரும்பிக்கொண்டிருந்தனர்.

தேனி அருகே மதுராபுரி புறவழிச்சாலையில் நேற்றிரவு 10 மணிக்கு இரண்டு வாகனங்களும் சென்ற போது எதிர்பாராதவிதமாக நேருக்கு நேர் மோதியது. அதிவேகத்தில் மோதியதால் இரண்டு வாகனங்களின் முன்பகுதி வெகுவாய் நொறுங்கியது. தகவல் அறிந்ததும் அல்லிநகரம் போலீஸார், தேனி தீயணைப்புத்துறையினர் மீட்புப்பணியில் ஈடுபட்டனர்.

இதில் வேனில் பயணித்த கோபி என்பவர் மகன் கனிஷ்க் (7), நாகராஜ் (40), சூர்யா (23) ஆகியோருக்கு தலை, கால் உள்ளிட்ட பல பகுதிகளிலும் பலத்த காயம் ஏற்பட்டது. 108 ஆம்புலன்ஸ் மூலம் தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இருப்பினும் வழியிலே மூவரும் உயிரிழந்தனர்.

பேருந்தில் பயணித்த சேலம் சங்ககிரியைச் சேர்ந்த வசந்தா (62), சித்தாயி(65), பழனியம்மாள்(55), விஜயா(65) மற்றும் வேனில் பயணித்த ஒசூரைச் சேர்ந்த ராமன்(43), சண்முகராஜா(25), பரத்(23) உள்ளிட்ட 14க்கும் மேற்பட்டோர் பலத்த காயத்துடன் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த விபத்தினால் ஒரு மணிநேரத்துக்கும் மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## ரானா நாடு கடத்தல் முதல் F-35 போர் விமானம் ஒப்பந்தம் வரை மோடி ட்ரம்ப் சந்திப்பில் முக்கிய நிகழ்வுகள்

வாஷிங்டன், பிப்.15



அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப்பை, பிரதமர் நரேந்திர மோடி அதிகாலை சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பின்போது மும்பை தீவிரவாத தாக்குதல் குற்றவாளி தஹாவூர் ரானாவை இந்தியாவுக்கு நாடு கடத்துவது, தி35 போர் விமானங்களை வாங்குவது, எண்ணெய் இறக்குமதி, வர்த்தக ஒப்பந்தம் எனப் பல்வேறு விஷயங்கள் குறித்து இருதரப்பிலும் ஆக்கபூர்வமான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பேச்சுவார்த்தையை முடித்துக் கொண்டு பிரதமர் மோடி தாயகம் புறப்பட்டுவிட்டார்.

ரானா நாடு கடத்தல்: கடந்த 2008ம் ஆண்டு மும்பையின் சத்ரபதி ரயில் நிலையம் மற்றும் நட்சத்திர ஓட்டல்களில் புகுந்த பாகிஸ்தான் தீவிரவாதிகள் 10 பேர் பயங்கர தாக்குதல் நடத்தினர். சுமார் 60 மணி நேரம் நடந்த இந்த துப்பாக்கிச் சண்டையில் வெளிநாட்டினர் உட்பட 166 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலில் தொடர்புடைய கனடா வாழ் பாகிஸ்தானியரான தஹாவூர் ராணா. மும்பை தாக்குதலை திட்டமிடுவதற்காக மும்பையின் தாஜ் மஹால் ஓட்டலில் சில நாட்கள் தங்கியிருந்து நோட்டமிட்டதாக ராணா மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. கடந்த 2009ம் ஆண்டு கைது செய்யப்பட்ட ரானா அமெரிக்க சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே, ரானாவை நாடு கடத்தக் கோரி இந்தியா சார்பில் அமெரிக்காவின் கீழ் நீதிமன்றங்களில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இதை விசாரித்த உச்ச நீதிமன்றம் ரானாவை நாடுகடத்த பச்சைக்கொடி காட்டியது. இது குறித்து மோடியுடனான சந்திப்பின்போது ட்ரம்ப், "2008 மும்பை தாக்குதலுக்கு சதி செய்த தஹாவூர் ரானாவை நாடு கடத்த நான் உத்தரவிட்டுள்ளேன். இந்தியாவில் ரானா நீதியின் முன் நிறுத்தப்படுவார்." என்று கூறியுள்ளார். இதற்கு நன்றி தெரிவித்துள்ள பிரதமர் மோடி, "2008ல் இந்தியாவில் படுகொலைகளை நிகழ்த்திய குற்றவாளியை நாடு கடத்த உத்தரவிட்ட அதிபருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனி இந்திய நீதிமன்றம் உரிய நடவடிக்கை எடுக்கும்." என்று கூறியுள்ளார்.

தி35 போர் விமான ஒப்பந்தம்: இந்தியாவுக்கான ராணுவ தளவாட ஒப்பந்தங்கள் குறித்து பேசிய அதிபர் ட்ரம்ப், "இந்தியாவுக்கு ராணுவ தளவாடங்கள் விற்பனையை அமெரிக்கா அதிகரிக்கவுள்ளது. இந்தியாவுக்கு தி35 ஸ்டீல்த் ஃபைட்டர் விமானங்களை வழங்கவுள்ளோம் என்று ட்ரம்ப் கூறினார். அதேபோல், அமெரிக்க இந்திய முக்கிய பாதுகாப்பு கூட்டாண்மைக்கான புதிய 10 ஆண்டு ஒப்பந்தம் இந்த ஆண்டின் பிற்பகுதியில் கையெழுத்திட முடிவு எட்டப்பட்டது.

வர்த்தக பேச்சுவார்த்தை: அமெரிக்க அதிபரான நாள் தொட்டு இறக்குமதி வரி உள்ளிட்ட பல்வேறு வரிவிதிப்புகள் மூலம் உலக நாடுகளை ட்ரம்ப் அதிரவைத்துள்ளார். இந்நிலையில், மோடி ட்ரம்ப் சந்திப்பின்போது வரி விதிப்புகள் தொடர்பான சமரச பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதென்ன ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து பிரதமர் மோடி, "இந்தியா அமெரிக்கா என இருதரப்புக்கும் பலன் தரும் வகையில் வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெறும். இதில் எண்ணெய், எரிவாயு தொடர்பான ஒப்பந்தங்கள் பற்றி ஆலோசிக்கப்படும்." எனத் தெரிவித்துள்ளார்.


பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, இரு தலைவர்களும் 2030ஆம் ஆண்டுக்குள் இருதரப்பு வர்த்தகத்தை 500 பில்லியன் டாலராக உயர்த்துவதற்கான புதிய இலக்கை "மிஷன் 500" என்ற பெயரில் நிர்ணயித்தனர்.

விகிநிகி + விமிநிகி சுவாரஸ்யப் பேச்சு: பிரதமர் மோடி பேசுகையில், "இங்கே அதிபர் ட்ரம்ப் அமெரிக்காவை மீண்டும் பெரிதாக்குவோம் (விகிநிகி) எனக் கூறியுள்ளார். அதேபோல் நாங்கள் விக்ஷித் பாரத் (வளர்ச்சியடைந்த இந்தியா) என்ற நோக்கில் செயல்படுகிறோம். ட்ரம்ப் மொழியில் சொல்ல வேண்டும் என்றால் அதற்கு (MIGA) 'மேக் இந்தியா கிரேட் அகெய்ன்' என்று அர்த்தம். அமெரிக்காவும், இந்தியாவும் இணைந்து செயல்பட்டால் வளர்ச்சிக்கான மெகா கூட்டணியாக அது அமையும் என்றார். அவருடைய இந்த சுவாரஸ்யப் பேச்சு வரவேற்பைப் பெற்றது.

உதவிக்கு வரத் தயார்: மோடி ட்ரம்ப் கூட்டாக பத்திரிகையாளர்களை சந்தித்தபோது ட்ரம்ப், சீனா இந்தியா எல்லைப் பிரச்சினை குறித்துப் பேசினார். அப்போது அவர், "நான் இந்திய சீன எல்லையில் என்ன நடக்கிறது என்று கவனிக்கிறேன். அங்கே நிகழும் சண்டைகள் ஆபத்தானவை. அதில் நான் ஏதும் உதவி செய்ய வேண்டும் என்றால் உதவத் தயாராக இருக்கிறேன். அங்கு நிகழும் சண்டை நிறுத்தப்பட வேண்டும்." என்றார்.

## மும்பை தாக்குதலில் தொடர்புடைய பயங்கரவாதியை இந்தியாவுக்கு நாடு கடத்த டிரம்ப் ஒப்புதல்

நியூயார்க், பிப்.15



மராட்டிய மாநிலம் மும்பையில் கடந்த 2008ம் ஆண்டு நவம்பர் 26ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில், 6 அமெரிக்கர்கள் உள்பட 166 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர். இந்த பயங்கரவாத தாக்குதலுக்கு பாகிஸ்தான் வம்சாவளியைச் சேர்ந்த கனடா தொழிலதிபர் தஹாவூர் ராணா என்பவர் மூளையாக செயல்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

தற்போது 63 வயதாகும் தஹாவூர் ராணாவை கடந்த 2009ம் ஆண்டு எப்.பி.ஐ. அதிகாரிகள் சிகாகோவில் கைது செய்தனர். தற்போது லாஸ் ஏஞ்சல்ஸ் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தஹாவூர் ராணாவை நாடு கடத்தும்படி அமெரிக்காவிடம் இந்திய அரசு கோரிக்கை விடுத்தது.

இதற்கிடையில், தன்னை இந்தியாவுக்கு நாடு கடத்த தடை விதிக்கக் கோரி, கலிபோர்னியா மற்றும் சான் பிரான்சிஸ்கோ கோர்ட்டுகளில் தஹாவூர் ராணா தாக்கல் செய்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டில் தஹாவூர் ராணா மேல்முறையீடு செய்தார். இதை விசாரித்த அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டு, தஹாவூர் ராணாவை இந்தியாவுக்கு நாடு கடத்த அனுமதி அளித்து உத்தரவிட்டது.

இந்த நிலையில் மும்பை தாக்குதலில் தொடர்புடைய பயங்கரவாதி தஹாவூர் ராணாவை இந்தியாவுக்கு நாடு கடத்த அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் ஒப்புதல் அளித்துள்ளார். இரண்டு நாள் பயணமாக அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் மோடி, அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பை இன்று சந்தித்தார். வெள்ளை மாளிகையில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது, வர்த்தகம், பாதுகாப்பு. தொழில் நுட்பம் உள்ளிட்டவை தொடர்பாக இரு தலைவர்களும் ஆலோசித்தனர்.

இருதரப்பு பேச்சுவார்த்தைக்குப் பிறகு அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப். மும்பை பயங்கரவாத தாக்குதலில் தொடர்புடைய பயங்கரவாதி தஹாவூர் ராணாவை இந்தியாவுக்கு நாடு கடத்த அமெரிக்கா ஒப்புக் கொள்வதாக தெரிவித்தார். இது தொடர்பாக அவர் கூறும்போது, "மும்பை பயங்கரவாதத் தாக்குதலில் குற்றம் சாட்டப்பட்ட மிகவும் ஆபத்தான ஒருவரை நாங்கள் இந்தியாவிடம் ஒப்படைக்கிறோம்" என்று கூறினார்.

இதற்காக அதிபர் டிரம்புக்கு, பிரதமர் மோடி நன்றி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பிரதமர் மோடி கூறும்போது. "மும்பை பயங்கரவாத தாக்குதலில் தொர்புடைய பயங்கரவாதி இந்தியாவுக்கு விசாரணைக்காக நாடு கடத்தப்படுகிறார். இந்த செயல்முறையை விரைவுபடுத்தியதற்காக அதிபர் டிரம்புக்கு நான் நன்றி கூறுகிறேன்" என்று கூறினார்.

## வழக்கத்தைவிட 3 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை அதிகரிக்கும்



சென்னை, பிப்.15

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் இன்று முதல் வரும் 19ம் தேதி வரை வறண்ட வானிலை நிலவக்கூடும்.

இன்றும், நாளையும் ஓரிரு இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தைவிட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கக்கூடும். காலை நேரத்தில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நேற்று அதிகபட்சமாக திருப்பத்தூரில் 36.1 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலையாக சேலத்தில் 15.9 டிகிரி செல்சியஸ் பதிவாகியுள்ளது.

சென்னையில் இன்று வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## சரயு நதியில் விடப்பட்ட அயோத்தி தலைமை அர்ச்சகர் உடல்!

லக்னோ, பிப்.15




உத்தரபிரதேச மாநிலம் அயோத்தியில் உள்ள ஸ்ரீராமர் கோவிலின் தலைமை அர்ச்சகர் மகந்த் சத்யேந்திர தாஸ் உடல் சரயு நதியில் ஜலசமாதி செய்யப்பட்டது. 85 வயதான அவருக்கு இம்மாத தொடக்கத்தில் பக்கவாதம் ஏற்பட்டு, லக்னௌவில் உள்ள சஞ்சய் காந்தி முதுநிலை மருத்துவ அறிவியல் நிறுவன (எஸ்ஜிபிஜிஐ) மருத்துவமனையின் நரம்பியல் சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் காலமானதாக மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அயோத்தியில் உள்ள இல்லத்தில் மகந்த் சத்யேந்திர தாஸின் உடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட நிலையில், நேற்று சரயு நதியில் விடப்பட்டது. பலத்த போலீஸ் பாதுகாப்புடன் நதியின் ஆழமான பகுதிக்கு சத்யேந்திர தாஸின் உடலை கொண்டுசென்ற அர்ச்சகர்கள் ஜலசமாதி செய்தனர்.

## தமிழக வெற்றி கழகம் கட்சி சார்பில் அனகாபுத்தூர் பகுதியில் கொடியேற்று நிகழ்ச்சி - 500 நபர்களுக்கு அன்னதானம் வழங்கல்



அனகாபுத்தூர் பிப்.15

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் தமிழக வெற்றி கழகம் சார்பாக தமிழக வெற்றி கழகம் கட்சி தொடங்கி ஒரு வருட நிறைவை தொடர்ந்து அனகாபுத்தூர் பகுதியில் அனகாபுத்தூர் பகுதி தலைவர் எஸ்.எம்.மதன் அவர்களின் தலைமையில் ஐந்து இடங்களில் கொடியேற்று நிகழ்ச்சி மிக சிறப்பாக நடைபெற்றது

இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்த ஆர்.பிரபா, பகுதி துணை தலைவர் எம்.சூர்யா, 1வது வட்டத் தலைவர் எம்.துளசிராம், 2வது வட்டத் தலைவர் வி.ஹேமத்குமார், 4வது வட்டத் தலைவர் இ.பிரபு, 1வது வட்டத் செயலாளர் ஏ.யுவராஜ், 1வது, 2வது, 3வது, 4வது வட்ட நிர்வாகிகள் சார்பில் செய்திருந்தனர்

இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட தலைவர் மின்னல் குமார், கழக இணை ஒருங்கிணைப்பாளர் சமூக ஊடகப்பிரிவு அறிவானந்தம், மாவட்ட இளைஞரணி செயலாளர் கே.மதன், மாவட்ட மகளிர் அணி தலைமை ஐஸ்வர்யா மதன் ஆகியோர் கலந்து கொண்டு ஊர்வலமாக மேளத்தளத்துடன் சென்று கட்சி கொடி ஏற்றி வைத்து சுமார் 500 நபர்களுக்கு மதிய உணவு மற்றும் இனிப்புகள் வழங்கினார்கள் இதில் பகுதி நிர்வாகிகள் இளைஞர் அணி மகளிர் அணி மாணவர் அணி மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்..



நீலகிரி மாவட்டம், உதகை நஞ்சநாடு கிராமம், காட்டுக்குப்பை பகுதியில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழு தலைவர் / அணைக்கட்டு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி. நந்தகுமார் மற்றும் குழு உறுப்பினர்கள் உடுமலை கே.ராதாகிருஷ்ண் (உடுமலைப்பேட்டை), கடம்பூர் ராஜு (கோவில்பட்டி), ஒய். பிரகாஷ் (ஓசூர்), க.அசோகன் (சிவகாசி) ஆகியோர்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் சார்பில், குந்தா மெகா நீரேற்று புனல் திட்டப் பணிகளை ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் முதன்மைச் செயலாளர் முனைவர் கி. சீனிவாசன் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு, கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி கௌசிக் உட்பட பலர் உள்ளனர்.

## தாம்பரம் மாநகராட்சி பகுதி சார்பில் தாம்பரத்தில் பொதுமக்கள் குறைதீர்க்கும் சிறப்பு முகாம்



தாம்பரம் பிப்.15

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலம் 49வது வார்டு பகுதியில் அம்பேத்கர் திருமண மண்டபத்தில் பொதுமக்கள் குறைதீர்க்கும் சிறப்பு முகாமில் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சருமான தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது

இதில் தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா. எம்,எல்,ஏ தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் எஸ்.பாலச்சந்தர், தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, மாநகராட்சி துணை மேயர் கோ காமராஜ், மற்றும் 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். உடன் பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பொதுமக்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் முகாமில் கலந்து கொண்டனர்.

## தாம்பரத்தில் எஸ்.டி.பி.ஐ. கட்சியினர் சார்பில் வக்ப் திருத்த சட்டமசோதாவை திரும்ப பெற வலியுறுத்தி சட்ட நகல் எரிப்பு போராட்டம்



தாம்பரம் பிப் 15

தாம்பரத்தில் எஸ்.டி.பி.ஐ. கட்சியினர் சார்பில் வக்ப் திருத்த சட்டமசோதாவை திரும்ப பெற வலியுறுத்தி, சட்ட நகலை எரித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தாம்பரம் பேருந்து நிலையம் முன்பு செங்கல்பட்டு வடக்கு மாவட்ட எஸ்.டி.பி.ஐ. கட்சி சார்பில் மத்திய அரசு கொண்டுவந்துள்ள வக்ப் திருத்த சட்ட மசோதாவை கண்டித்தும், வக்ப் திருத்த சட்ட மசோதாவை திரும்ப பெற்ச் வலியுறுத்தி புதிய சட்ட திருத்த மசோதா நகல் எரிப்பு போராட்டம் நடைபெற்றது.

இந்த போராட்டத்தில் எஸ்.டி.பி.ஐ. கட்சியினர் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு மத்திய அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.


மேலும் தமிழக அரசு உடனடியாக மத்திய அரசு கொண்டு வந்துள்ள புதிய வக்ப் திருத்த சட்டமசோதாவை மத்திய அரசு திரும்ப பெற வலியுறுத்தி சட்டமன்றத்தில் கண்டன தீர்மானம் நிறைவேற் வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இந்தநிலையில் ஆர்பாட்டத்தின் போது, திடீரென சட்டமசோதா நகல் எரிப்பில் எஸ்.டி.பி.ஐ.கட்சியினர் ஈடுபட்டதால் போலீசார் அவர்களை தடுக்க முயன்றதால் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் எஸ்.டி.பி.ஐ.கட்சியினர் சட்ட நகலை கிழித்து எரிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் எஸ்.டி.பி.ஐ. கட்சியின் செங்கல் பட்டு வடக்கு மாவட்ட துணை தலைவர் ராஜாமுகம்மது, பொதுசெயலாளர் ரபிக் முகம்மது, மாநில செயற்குழு உறுப்பினர் டேவிட்,

மாவட்ட செயலாளர் கோபி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் வெங்கட், தாம்பரம் தொகுதி தலைவர் ஷேக் முகம்மது உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.






புதுக்கோட்டை பிருந்தாவனத்தில்யிருந்து அரசு மருத்துவக் கல்லூரிக்கு செல்லும் ஆறு கிலோமீட்டர் சாலை மழைக்காலத்தில் மிகவும் சேதம் அடைந்திருந்தது அவசரக்காலம் கருதி நெடுஞ்சாலை துறை புதுக்கோட்டை கோட்டத்தின் சார்பாக சாலை சரி செய்யப்பட்டு பேட்ச் ஒர்க் சாலையை சீர் செய்ததால் பொதுமக்கள் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.







சிவகங்கை சிசிசிடி பிரிவு குழுவினர் சிவகங்கை முதல் மதுரை பைபாஸ் ரோடு ஜே.என். என்ற இடத்தில் திடீர் சோதனை நேற்று நடத்தினர் அப்போது சந்தேகத்திற்குரிய பொலிரோ பிக்கப் ஜிழி 42 னி 1102 பதிவு எண் கொண்ட வாகனத்தில் சோதனை செய்ததில் 51 பிளாஸ்டிக் பைகளுடன் தலா 40 கிலோ மொத்தம் 2040 கிலோ அரிசி இருந்தது தெரியவந்தது வெள்ளிக்குறிச்சியை சேர்ந்த ராஜ்குமார் (19) மற்றும் ஜெயலட்சுமி (54)சிசிசிடி பிரிவு சார்பு ஆய்வாளர் தேபாகர் இருவரையும் கைது செய்து கடத்தப்பட்ட அரிசி மூட்டைகளை கைப்பற்றினார்.

## சிவகங்கையில் இந்து அறநிலையத்துறையின் சார்பில் 12 ஜோடிகளுக்கு காதலர் தினத்தில் சில்லுனு திருமணம்





சிவகங்கை பிப்.15

சிவகங்கை மாவட்டம் தமிழக முதலமைச்சரின் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில், நிர்வாக ரீதியாக இருக்கின்ற 20 மண்டலங்களில், வறுமை கோட்டிற்கு கீழுள்ள 25 மணமக்களுக்கு அப்பகுதி திருக்கோயில்களில் திருமணம் நடத்தப்படும் என மானிய கோரிக்கை அறிவிப்பினை செயல்படுத்திடும் விதமாக பல்வேறு திருமணங்கள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் ஒன்றாக சிவகங்கை நகராட்சி அருள்மிகு சுந்தரராஜபெருமாள் கோவிலில்

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் பொருளாதாரத்தில் பின்தங்கிய இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் தங்கத்தாலி உட்பட ரூ.50,000/ மதிப்பில் சீர்வரிசைகளை நேற்று காதலர் தினமான இந்த நாளில் 12 ஜோடிகளுக்கு

கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் பெரியகருப்பன் தலைமையில் திருமணம் செய்து வைத்தார்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் தங்கத்தாலி உட்பட ரூ.50,000/ மதிப்பில் சீர்வரிசைகள் வழங்கப்பட்டது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் 1100 இணைகளுக்கு திருமணம் நடத்தி வைக்கப்பட்டதாகவும். இவ்வாண்டு 700 இணைகளுக்கு திருக்கோயில் சார்பில் ரூ.10,000/ உயர்த்தி 4 கிராம் தங்கத்தாலி உட்பட ரூ.60,000/ மதிப்பில் சீர்வரிசைகள் வழங்கி திருமணம் நடத்தி வைக்கப்படும் என தமிழக முதல்வர் தெரிவித்துள்ளார் என்றும் அதன்படி சிவகங்கை இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் மண்டலத்திற்கு 35 இணைகளுக்கு திருமணம் நடத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக சிவகங்கை இணை ஆணையர் மண்டலத்தில் 22 இணைகளுக்குஏற்கனவே திருமணம் நடத்தி வைக்கப்பட்டது இன்று சிவகங்கை நகர் அருள்மிகு சுந்தரராஜ பெருமாள் திருக்கோயிலில் வைத்து 12 இணைகளுக்கு திருமணம் நடத்திவைக்கப்பட்டுள்ளது என்றும் காதலர் தின நாளில் இணைந்த ஜோடிகள் அன்போடு மகிழ்ச்சியோடும் வாழ வேண்டும் என்று அமைச்சர் பெரிய கருப்பன் தெரிவித்தார்.

இணைகளுக்கு திருமாங்கல்யம், மணமகன் ,மணமகள் ஆடை, கைக்கடிகாரம், பீரோ, கட்டில், மெத்தை, தலையணை, பாய், மிக்சி, குத்துவிளக்கு, காமாட்சி விளக்கு, குக்கர். கேஸ் ஸ்டவ். 10 கிலோ அரிசி சிப்பம், பூஜை பொருட்கள் மற்றும் சீர்வரிசை பாத்திரங்கள் உட்பட செலவினங்கள் அனைத்தும் உபயதாரர் மூலமாகவும் மற்றும் திருக்கோயில் மூலமாகவும் வழங்கபட்டது. இந்த நிகழ்ச்சியில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜீத்,இந்து சமய அறநிலைத்துறை இணைய ஆணையர், சிவகங்கை நகர் மன்ற தலைவர் துரை ஆனந்த், சிவகங்கை மாவட்ட அறங்காவலர் ஜெயமூர்த்தி, அறங்காவலர் குழு தலைவர் ரம்யா தனசேகரன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் பங்கேற்று திருமண தம்பதிகளை வாழ்த்தினார்.

## பல மாதங்களாக கிடப்பில் கிடக்கும் பணி இருசக்கர வாகனங்களால் நிரம்பி வழியும் மானாமதுரை பேருந்து நிலையம்








மானாமதுரை பிப்.15

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி புதிய பேருந்துநிலையத்தில் இருபக்க நுழைவு வாயில் பகுதியில் ஆர்ச் அமைப்பதற்காக நகராட்சி நிர்வாகம் சார்பில் பொக்கலைன் இயந்திரம் மூலம் பள்ளம் தோண்டப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது தற்போது வரை எவ்விதமான பணிகள் இதுவரை தொடங்கப்படவில்லை மேலும் மாற்றுத்திறனாளிகள் செல்லுக்கூடிய பாதையும் தடைப்பட்டு உள்ளது மாற்றுத்திறனாளிகள் செல்லும் பாதை அருகாமையில் சைவ உணவகம் உள்ளதால் உணவருந்த செல்லும் வாடிக்கையாளர்கள் அப்பாதையிலேயே வாகனங்களை நிறுத்திவிட்டு செல்கின்றனர்.

இதனால் வயதானவர்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். நுழைவாயில் ஆர்ச் கட்டும் பணி தொடங்கப்படுமா? அல்லது இன்னும் எத்தனை வருடங்கள் கழித்து தொடங்கப்படுமா ? என்று சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்?

இங்கு வாகன காப்பகத்தில் போதுமான அளவில் இருசக்கர வாகனங்களை நிறுத்துவதற்கு இடமில்லாததால் பேருந்து நிறுத்தப்படும் ரேக் மற்றும் பேருந்து நிலையத்தின் பகுதிகளில் போக்குவரத்து பாதிப்பு ஏற்படுத்த வகையில் இருசக்கர வாகன ஓட்டிகள் தங்கள் வாகனங்களை நிறுத்திவிட்டு செல்கின்றனர் போக்குவரத்து காவல்துறையின் மூலம் வாகனங்கள் நிறுத்தினால் அபராதம் விரிக்கப்படும் என எச்சரிக்கை பதாகைகள் வைத்தும் வாகன ஓட்டிகள் அதை அலட்சியத்துடனே கடந்து சென்று வாகனங்களை நிறுத்தி விட்டு செல்கின்றனர். மதுரை ராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் அடிக்கடி விபத்தும் ஏற்படும் சூழலில் மேலும் விபத்தை அதிகரிக்கும் வகையில் தோண்டப்பட்ட பள்ளத்தால் தற்போதைய சூழ்நிலை உருவாகி உள்ளது. இரவு மின்சாரம் துண்டித்த வேளையில் விபத்து ஏற்படும் அபாயமும் உள்ளது. பணியை உடனடியாக துரிதப்படுத்த நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமோ ? என்ற கேள்வி எழுந்துள்ளது.



தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி கே. கே. நகர் பகுதியில், தார் சாலை அமைக்கும் படி பொதுமக்கள் பேரூராட்சி நிர்வாகத்திடம் கோரிக்கை வைத்திருந்தனர். இதனை அடுத்து, ரூபாய் 1 கோடியே 60 லட்சம் நிதி மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கும் பணிக்காக ஒப்பந்தம் விடப்பட்டது. இந்த நிலையில், அரசு ஒப்பந்ததாரர் மூலம் தார் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. பேரூராட்சிகளின் உதவி செயற்பொறியாளர் மணிமாறன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, தார் சாலை பணிகளை விரைவாகவும் தரமாகவும் முடிக்குமாறு அவர் அறிவுறுத்தினார். பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர், அரசு ஒப்பந்ததாரர் மற்றும் பணியாளர்கள் இருந்தனர்.



தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே வி. சுப்புலாபுரம் கிராமத்தில் 50 லட்சம் மதிப்பீட்டில் புதியஅரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டிட பணிக்கு ஆண்டிபட்டி திமுக சட்டமன்ற உறுப்பினர் மகாராசன் தலைமையில் பூமி பூஜை நடைபெற்றது இந்நிகழ்வில் ஆண்டிபட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம் மற்றும் பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் அதிகாரிகள் கலந்து கொண்டனர்

## நத்தம் அருகே முத்தாலம்மன் கோவில் திருவிழா - நேர்த்திக்கடன் செலுத்திய பக்தர்கள்



நத்தம், பிப், 15

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே முளையூரில் முத்தாலம்மன் கோவில் திருவிழா நடந்தது. இதையொட்டி நேற்று முன்தினம் இரவு முளையூரில் செய்யப்பட்ட முத்தாலம்மன் ஊர்வலமாக கோவிலுக்கு அழைத்து வரப்பட்டு கண் திறக்கப்பட்டது. பின்னர் அம்மனுக்கு சிறப்பு அலங்காரமும், அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது.தொடர்ந்து பக்தர்கள் அக்னிசட்டி, அலகு குத்துதல், மாவிளக்கு,கிடாய்கள் வெட்டி தங்களது நேர்த்திக்கடன்களை செலுத்தினர். பின்னர் நேற்று மாலையில் பக்தர்கள் புடைசூழ அம்மன் பூஞ்சோலை சென்றது.விழாவில் சுற்றுவட்டாரங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். திருவிழாவிற்கான ஏற்பாடுகளை முளையூர் ஊர் கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.

## அலங்காநல்லூர் அருகே தீர்த்தக்கரை மாரியம்மன் கோவில் திருவிழா




அலங்காநல்லூர்.பிப்.15

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே கீழச்சின்னம்பட்டி பகுதியில் உள்ள ஸ்ரீபுரம் தீர்த்தக்கரை மாரியம்மன் கோவில் தைப்பொங்கல் உற்சவ விழா நடைபெற்றது இதில் முதல் நாள் கொடியேற்றமும் கம்பம் சாட்டுதலும் அம்மனுக்கு காப்பு கட்டுதலுடன் நிகழ்ச்சி தொடங்கியது.

இரண்டாம் நாள் பெண்கள் கும்மி பாட்டு கொட்டி அம்மன் கோவில் முன்பு வலம் வந்தனர் மூன்றாம் நாள் நிகழ்ச்சியாக பக்தர்கள் பால்குடம் எடுத்து வந்து அம்மனுக்கு குடம் குடமாக பாலாபிஷேகம் நடத்தினர் அன்று மாலையில் முல்லை பெரியாறு கால்வாயில் சக்தி கரகம் எடுத்து வந்து பூஜை செய்து முளைப்பாரியுடன் திரும்ப கோவிலுக்கு சென்று அடைந்தனர்.

இதன் முன்னதாக நான்காம் நாள் நேர்த்திக்கடன் செலுத்தும் நிகழ்ச்சியாக அம்மனுக்கு மாவிளக்கு எடுத்தல் அக்கினி சட்டி அலகு குத்துதல் கரும்புத் தொட்டில் எடுத்து வருதல் உள்ளிட்ட பல்வேறு நேர்த்தி கடன்களை செலுத்தினர் தொடர்ந்து அன்னதானம் வழங்குதல் தீர்த்த வாரி நடத்துதல் அம்மன் வீதி உலா வருதல் நடந்தது நிறைவாக எட்டாம் நாள் திருவிழாவில் மஞ்சள் நீராடுதல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன இந்த விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். இவ்விழா ஏற்பாடுகளை ஸ்ரீநிதி அம்மா, செய்திருந்தனர்.



பன்னாட்டு தமிழ் உறவு மன்ற உலக அமைப்பாளர் கவிக்கோ சேதுராமன் 33 ஆம் ஆண்டு தமிழ் உறுதிப்பயணம் வரவேற்பு மற்றும் 90 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா மதுரை வடக்கு மசூதி மணியம்மை மழலையர் பள்ளியில் நடைபெற்றது. நிகழ்வில் பாவேந்தர் மன்ற தலைவர் வரதராஜன் தலைமையில் உலகத் திருக்குறள் பேரவை மதிப்பூர் தலைவர் கார்த்திகேயன் மணிமொழியன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மார்சல் முருகன் கவிஞர் ஞான ஆனந்தராஜ் அசோக் ராஜ் பாவலர் மாடசாமி லட்சிய பாடகர் சிதம்பரம் கவிஞர் முத்துவேல் சாந்தி திருநாவுக்கரசு பாலா தனசிங் முருகன் பத்மபாதம் உட்பட ஏராளமான வர்கள்கலந்து கொண்டனர்.

## மாணவிக்கு பாலியல் சீண்டல் பாளை கல்லூரி பேராசிரியர் கைது



பாளையங் கோட்டை, பிப்.15

பாளையங் கோட்டை சேவியர் கல்லூரியில் தற்காலிக பேராசிரியராக வணிகவியல் பிரிவில் பணியாற்றி வந்த பிரைட் என்ற மருத குளத்தைச் சேர்ந்தவர், நெல்லை டவுணை சேர்ந்த 17 வயது மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இது குறித்து மாணவி பாளையங்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளிக்க, போக்சோ சட்டத்தின் கீழ் பிரைட்டை கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

## கர்நாடகாவில் இருந்து அரசு பஸ்ஸில் புகையிலை கடத்திய வாலிபரை கைது செய்த போலீசார்



ஊட்டி, பிப்15

தமிழக அரசு சார்பில் புகையிலை, குட்கா உள்ளிட்ட போதை வஸ்துக்கள் விற்பனை செய்ய தடை செய்யப்பட்டுள்ளது. இதனிடையே நேற்று கர்நாடகாவில் இருந்து அரசு பஸ்ஸில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் கடத்தப்பட்டு வருவதாக கிடைத்த தகவலின் பேரில் தமிழகம் கர்நாடக எல்லைப் பகுதியில் உள்ள கக்கலல்லா சோதனை சாவடியில் சப் இன்ஸ்பெக்டர் கபில்தேவ் தலைமையிலான குற்றப்பிரிவு போலீசார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது கர்நாடக மாநிலம் மைசூரில் இருந்து திருச்சூர் செல்லும் கேரளா அரசு பஸ்சை போலீசார் சோதனை செய்தபோது பஸ்ஸில் பின் இருக்கையில் 83 புகையிலை பண்டல்கள் பதுக்கி வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக கூடலூர் ஓட்டு வயல் பகுதியை சேர்ந்த அன்சர் அலி (வயது 32) என்பவரை கைது செய்து மசினகுடி போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## திருப்பூர் அப்பல்லோ மருத்துவமனை கிளை திறப்பு விழா



திருப்பூர், பிப்.15

சென்னையை தலைமை யிடமாக கொண்டு இயங்கி வரும் அப்பல்லோ மருத்துவமனையின் புதியகிளை திறப்பு விழா நிகழ்ச்சி திருப்பூர் மங்கலம் சாலையில் நடைபெற்றது. இந்த மருத்துவமனை யினை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவரும், முன்னாள் மக்களவை உறுப்பினருமான கே.எஸ்.அழகிரி, மற்றும் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர்.க. செல்வராஜ் ஆகியோர் ரிப்பன் வெட்டி குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தனர்.

இந் மருத்துவமனையில் பல் சிகிச்சைக்கான மருத்துவம்,சர்க்கரை நோய்,பொது மருத்துவம் என சிகிச்சைகள் வழங்கப்படுகிறது.

நிகழ்ச்சியில் மருத்துவர் ஆனந்தி அழகிரி, தொழிலதிபர் வசந்த் காங்கிரஸ் கமிட்டியின் திருப்பூர் மாநகர் மாவட்ட தலைவர். கிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர். கோபால்சாமி, மாநகர் மாவட்ட பொதுச்செயலாளர். பாகனேரி ரவி. முகமது ஹசன் உள்ளிட்ட காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள்,கிட்ஸ் கிளப் பள்ளி குழுமத்தின் தலைவர்.மோகன் கார்த்திக்,திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொழிற்சங்க மாநில துணைத்தலைவர்.டிகே.டி நாகராஜ் மற்றும் தொழில் அதிபர்கள்பலர் கலந்து கொண்டனர்.

## குன்னூரில் வருவாய் துறை சார்பில் போதை பொருள்களுக்கு விழிப்புணர்வு பேரணி




குன்னூர் ,பிப்15

தமிழக அரசு சார்பில் மாநில முழுவதும் தடை செய்யப்பட்ட போதை பொருட்கள் குறித்த விழிப்புணர்வு முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதனிடையே குன்னூரில் வருவாய் துறை சார்பில் நேற்று போதை விழிப்புணர்வு பேரணி நடந்தது. பெட் போர்டு பகுதியில் குன்னூர் தாசில்தார் ஜவகர் துவக்கி வைத்தார். அங்கிருந்து ப்ளூ ஹில்ஸ்,ஒய் எம் சி ஏ,யோகேஷ் கார்னர், அரசு மருத்துவமனை, மவுண்ட் ரோடு வழியாகதீயணைப்பு நிலையம் வரை பேரணி நடைபெற்றது.இதில் குன்னூர் புனித அந்தோனியார் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் போதை விழிப்புணர்வு தொடர்பாக பதாகைகளை ஏந்தி கோஷமிட்டு வந்தனர். நிகழ்ச்சியில் குன்னூர் வருவாய் ஆய்வாளர் செங்கோடன்,கேத்தி வருவாய் ஆய்வாளர் மஞ்சு பிரியா, கிராம நிர்வாக அலுவலர் பிரதீப் உட்பட வருவாய்த்துறை அதிகாரி மற்றும் பள்ளி மாணவர்கள் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர்..

## குச்சனூர் சனி பகவான் கோவில் அரபி ஆற்றுப் பகுதியில் அகில பாரதீய சந்நியாசிகள் சங்கம் சார்பில் தீப ஆராதனை





சின்னமனூர் பிப்15

தேனிமாவட்டம் சின்னமனூர் அருகே குச்சனூரில் உள்ள பிரசித்தி பெற்ற சனி பகவான் திருக்கோவில் சுரபி ஆறில் தவத்திரு ஸ்ரீமத் சுவாமி ராமானந்தா மகராஜ் தலைமையில் நதி நீர்நிலைகளை தூய்மை படுத்தவும், உலக நன்மைக்காகவும் 2 ஆம் ஆண்டு தீப ஆராதனை நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு அகில பாரதீய சந்நியாசிகள் சங்க நிறுவனர் சுவாமி சிவராமனந்தா,இணைச் செயலாளர் சுவாமி ஈஸ்வரனந்தா, குச்சனூர் பேரூராட்சி தலைவர் ரவிச்சந்திரன், கைலாசபட்டி ஸ்ரீ ஜிஜி லாஅல்சித் பாபாஜி ஆஸ்ரமம் தலைவர் சரவணன், தேவதானப்பட்டி அஜிஸ்பாய், குச்சனூர் பேரூராட்சி வார்டு உறுப்பினர் முத்துராமலிங்கம், தேவதானப்பட்டி மூங்கிலணை காமாட்சி அம்மன் கோவில் பரம்பரை பூசாரி சுந்தரலிங்கம், ஜெயராமன், பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விழாக்குழுவின் சார்பில் பக்தர்களுக்கு மற்றும் பொதுமக்களுக்கு மூலிகை கசாயம் வழங்கினர்.




இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற வங்கியாளர்களுக்கான மாவட்ட ஆலோசனைக் குழு கூட்டத்தில், 202526 ஆம் ஆண்டின் முன்னுரிமைத் துறைகளுக்கான வளம் சார்ந்த கடன் திட்ட அறிக்கையினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், வெளியிட்டார்.



தமிழ்நாடு முதலமைச்சர், தலைமைச் செயலகத்திலிருந்து பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் தேனி மாவட்டம் வெள்ளையம்மாள்புரம் மற்றும் இராஜதானி அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 3.11 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் மற்றும் அறிவியல் ஆய்வக கட்டடத்தினை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங்,, ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் ஆ.மகாராஜன் முன்னிலையில், ராஜதானி அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுள்ள வகுப்பறை கட்டடத்தில் குத்துவிளக்கேற்றி வைத்து பார்வையிட்டார்கள்.



சிவகங்கை மாவட்டம், இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட துகவூர் கிராமத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நடத்தப்பட்ட தமிழக அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்களை விளக்க புகைப்படக் கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.



ஒரு முறை உபயோகித்து தூக்கி எறியக்கூடிய நெகிழிபைகள் மற்றும் பிற தடை செய்யப்பட்ட நெகிழி பொருட்களுக்கு மாற்றாக மஞ்சப்பை (மஞ்சள் துணிப் பை) பயன்பாட்டை ஊக்குவிக்கும் விதமாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள ரூ.10 செலுத்தினால் துணிப்பை வழங்கும் தானியங்கி இயந்திரத்தின் செயல்பாட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன், ஆய்வு மேற்கொண்டார்.




தமிழ்நாடு அரசு பள்ளி கல்வித்துறை சார்பாக குடியரசு தின விழா விளையாட்டுப் போட்டிகளில் மாநில அளவிலான சிலம்பம் போட்டியில் ஒற்றை கம்பு வீச்சில் வாடிப்பட்டி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி லோக பிரியா 19வயது சூப்பர் சீனியர் பிரிவில் இரண்டாம் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளார். இந்த சாதனை மாணவி மற்றும் பயிற்சியளித்த உடற்கல்வி ஆசிரியர்கள் சந்திரமோகன், பாண்டியம்மாள், வனிதா ஆகியோரை பள்ளி தலைமை ஆசிரியர் திலகவதி, உதவி தலைமை ஆசிரியர்கள் பிரேமா, பாரதி, திலகவதி மற்றும் கணினி ஆசிரியர் கார்த்திக் மற்றும் ஆசிரியைகள்வாழ்த்தி பாராட்டு தெரிவித்தனர்.

# மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் முதல் முறையாக கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையில் வெற்றிகரமாக சாதித்த மருத்துவ குழுவினருக்கு குவியும் பாராட்டு





தமிழ்நாடு அரசு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் மூலம் பொதுமக்கள் தரமான மருத்துவ வசதிகளை பெற்று பயனடையும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவ திட்டம், நம்மை காக்கும் 48 மணி நேரம் திட்டம் போன்ற திட்டங்கள் பிற மாநிலங்களுக்கு முன்னோடி திட்டங்களாகவும், பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ள திட்டங்களாகவும் விளங்கி வருகிறது.

மேலும், உடல் உறுப்பு தானத்தின் மூலம் நூற்றக்கணக்கான நோயாளிகளுக்கு வாழ்வு அளிக்கும் அரும்பணியில் நாட்டின் முன்னனி மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. குடும்ப உறுப்பினர்கள் மூளைச்சாவு நிலையை அடைந்த துயரச் சூழலிலும், அவர்களின் உடல் உறுப்புகளைத் தானமாக அளித்திட முன்வரும் குடும்பங்களின் தன்னலமற்ற தியாகம் போற்றுதலுக்கு உரியது. இதனை கௌரவிக்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த 2023 ஆம் ஆண்டு இறக்கும் முன் உறுப்பு தானம் செய்வோரின் இறுதி சடங்குகள் அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப்படும் என அறிவித்தார். அதனடிப்படையில், உடல் உறுப்புகளை தானம் செய்த அனைவரது உடலுக்கும் அரசு மரியாதை அளிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு சமீபத்தில் வெளியிட்ட தரவுகளில், உடல் உறுப்பு தானம் செய்தவர்களின் எண்ணிக்கை 2024ஆம் ஆண்டு அதிகரித்துள்ளது.

தமிழக அரசின் உடல் உறுப்பு தானக் கொள்கையை நிறைவேற்றும் வகையில் மதுரை அரசு மருத்துவமனையில் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் நடக்கின்றன. இதில், புதிய மைல் கல்லாக சென்னைக்கு அடுத்து, முதல் முறையாக மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் ஒரு நோயாளிக்கு மருத்துவக் குழுவினர் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்துள்ளனர்.

மதுரை ஆயுதப்படையில் காவலராக பணிபுரிந்து வந்த 31 வயதான மோகன்குமார் தலையில் அடிபட்ட நிலையில் மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர் கடந்த 5ஆம் தேதி சிகிச்சை பலனளிக்காமல் மூளைச்சாவு அடைந்தார். மோகன்குமாரின் உடல் உறுப்புகளை தானம் செய்வதற்கு அவரது மனைவி மற்றும் குடும்பத்தினர் முன் வந்தனர். அவரிடமிருந்து சிறு நீரகங்கள், கல்லீரல், கரு விழிகள், எலும்பு, தோல், இதயம் ஆகியவை தானமாக பெறப்பட்டது. ஒரு சிறுசீரகம் 22 வயது நோயாளிக்கு பொருத்தப்பட்டது. இதையடுத்து, அவரிடமிருந்து தானமாக பெறப்பட்ட கல்லீரல், மருத்துவமனையில் கல்லீரல் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் 42 வயதான மற்றொரு நோயாளிக்குப் பொருத்த மருத்துவமனை நிர்வாகம் முடிவு செய்தது.

அதனடிப்படையில், அரசு இராசாசி மருத்துவமனையின் சிறப்பு மருத்துவக் குழுவினர் கல்லீரல் பாதிக்கப்பட்ட நோயாளிக்கு காவலர் மோகன்குமாரிடமிருந்து பெறப்பட்ட கல்லீரலை பொருத்தி வெற்றிகரமாக அறுவை சிகிச்சையை நிறைவு செய்தனர். அறுவை சிகிச்சைக்கு பின்பு கல்லீரல் தானம் பெற்ற நோயாளியின் உடல்நிலை சீராக உள்ளது. சென்னை ராஜிவ்காந்தி ஸ்டான்லி மருத்துவமனைகளில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கு வெளியில் இருந்து மருத்துவர்கள் வந்து அறுவை சிகிச்சை செய்வர். முதன் முறையாக மதுரை அரசு மருத்துவமனையில் இங்குள்ள மருத்துவர்களே கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்தது சாதனையான விஷயம்.

கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்த குடல் மற்றும் இரைப்பை அறுவை சிகிச்சைப் பிரிவு மருத்துவர்கள் எஸ்.பத்மநாபன், எஸ்.கார்த்திகேயன், ஏ.சாஸ்தா, ஆர். வில்லாளன், எஸ்.பால முரளி, குடல் மற்றும் இரைப்பை மருத்துவப் பிரிவு மருத்துவர்கள் எம்.கண்ணன், ரமணி, மயக்கவியல் மருத்துவர்கள் கல்யாண சுந்தரம், வைரவராஜன், சண்முகசுந்தரம், செந்தில்குமார், பாலமுருகன், ரமேஷ், பிரமோத், முரளி, ரத்த வங்கி மருத்துவர் சிந்தா, செவிலியர்கள் ஜோதி, விஜயலட்சுமி மற்றும் மருத்துவக் கண்காணிப்பாளர் குமரவேலு, நிலைய மருத்துவ அலுவலர்கள் சரவணன், முரளிதரன் ஆகியோருக்கு பல்வேறு தரப்பினரும் பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர்.

தொகுப்பு

இ.சாலி தளபதி எம்.ஏ.,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.

ம.கயிலைச் செல்வம், பி.இ.,

உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி).

# தமிழ்நாடு தீயணைப்பு- மீட்புப்பணிகள் துறை சார்பில் மாநில விளையாட்டு போட்டி

மதுரை: பிப் 15



தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை மாநில விளையாட்டுபோட்டிகள் ஆண்டு தோரும் நடத்தப்பட்டு வருகிறது. இவ்வருடத்திற்கான போட்டிகள் உயர் அபாஷ்குமார், காவல் துறை தலைவர் / இயக்குநர் தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப்பணிகள் துறை உத்தரவின் பேரில் 12.02.2025 முதல் 14.02.2025 வரை தென்மண்டலம் மதுரை மாவட்டத்தில் உள்ள ஆயுதப்படை மைதானம் மற்றும் எம்.ஜி.ஆர்.விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இவ்விளையாட்டு போட்டிகளில் தென்மண்டலம் திருநெல்வேலி மண்டலம், வடமண்டலம், மேற்குமண்டலம் சேலம் மண்டலம், வடமேற்கு மண்டலம், மத்திய மண்டலம் ஆகிய ஐந்து அணிகளை சார்ந்த தீயணைப்பு வீரர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். இவ்விளையாட்டு போட்டியினை 12.02.2025 அன்று பி.சரவணகுமார், கூடுதல் இயக்குநரால் (நிர்வாகம்) துவக்கப்பட்டு 14.02.2025 வரை துறை போட்டிகளான அணிப்பயிற்சி போட்டி, நீர்விடுகுழாய் போட்டி, ஏணியில் விரைந்து ஏறும் போட்டி, தந்திர கதம்ப போட்டி மற்றும் தடகள போட்டிகளான ஓட்டப்போட்டிகள் மற்றும் நீச்சல் போட்டி, குண்டு எறிதல், ஈட்டி எறிதல், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், கைப்பந்து, கூடைப்பந்து மற்றும் இறகுபந்து போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் தீயணைப்பு வீரர்கள் ஆர்வமுடன் பங்கேற்று தங்களது திறனை சிறப்பாக வெளிப்படுத்தினர். இப்போட்டிகளில் வெற்றிபெற்ற தீயணைப்பு வீரர்களுக்கான பரிசளிப்பு விழா அபாஷ்குமார், காவல் துறை தலைவர் / இயக்குநர் தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப்பணிகள் துறை தலைமையில் 14.02.2025 அன்று மதுரை ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் வெற்றி பெற்ற தீயணைப்பு வீரர்களுக்கு பரிசுகள், கேடயம் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். இதில் வடமண்டல அணி முதலிடத்தினையும், தென்மண்டலம் இரண்டாவது இடத்தினையும், மத்திய மண்டலம் மூன்றாவது இடத்தினையும் பெற்றது. இவ்விழாவில் தென்மண்டல காவல்துறை தலைவர் மாநகர காவல் ஆணையாளர் காவல் கண்காணிப்பாளர் மதுரை மாவட்டம் மற்றும் பி.சரவணகுமார் தீயணைப்பு மீட்புப்பணிகள் துறை கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) கு.சத்யநாராயன் தீயணைப்பு மீட்புப்பணிகள் துறை கூடுதல் இயக்குநர் (பயிற்சிகள் மற்றும் செயல்பாடுகள்) மற்றும் தென்மண்டலம் திருநெல்வேலி மண்டலம், வடமண்டலம், மேற்குமண்டலம் சேலம் மண்டலம், வடமேற்கு மண்டலம், மத்திய மண்டலம் ஆகிய மண்டலங்களை சார்ந்த இணை இயக்குநர்கள் /துணை இயக்குநர்கள் மற்றும் மாவட்ட அலுவலர்கள் பங்கேற்றனர். இவ்விளையாட்டு போட்டிகளுக்கான ஏற்பாடுகளை கு.ராஜேஷ்கண்ணன், துணை இயக்குநர். தென்மண்டலம் மற்றும் த.வெங்கட்ரமணன் மாவட்ட அலுவலர் மதுரை மாவட்டம் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

# கரூர் மாவட்டத்தில் “மக்களுடன் முதல்வர் முகாமில் ரூ.67 லட்சம் மதிப்பு அரசு நலத்திட்ட உதவி வழங்கிய அமைச்சர்

கரூர், பிப்.15




கரூர் மாவட்டத்தில் தேற்று நடந்த மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் 83 பேருக்கு ரூ.67 லட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் வழங்கினார்.

தமிழக முதல்வரின் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் சித்தப்பட்டி காலனி, மலைக் கோவிலூர், சவுந்திராபுரம், இனுங்கனூர், குறும்பப்பட்டி ஆகிய 5 கிராம பகுதிகளில் நடந்தது. கலெக்டர் தங்கவேல் தலைமை வகித்தார். எம்எல்ஏக்கள் மாணிக்கம். இளங்கோ, சிவகாமசுந்தர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முகாமில் பொதுமக்களை நேரில்சந்தித்து கோரிக்கை மனுக்களை பெற்ற ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன் பேசியதாவது:

இலவச மின்சாரத்திற்காக பல ஆண்டு காலம் காத்திருந்த விவசாயிகள் இப்போது இந்த ஆட்சியில் அரவக்குறிச்சி தொகுதியில் மட்டும் 1,730 விவசாயிகள் மின்இணைப்பு பெற்றுள்ளனர். மேலும் 30 ஆண்டு காலத்திற்கு மேல் பராமரிப்பு இல்லாத காலனி விடுகளுக்கு சிறப்பு திட்டம் மூலம் தமிழக முதல்வர் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். பொதுமக்கள் வழங்கும் மனுக்கள் வெறும் காகிதம் அல்ல, அது அவர்களுடைய ரத்தம், வியர்வை. எனவே, அரசு அலுவலர்கள் அதனை தனி கவனம் செலுத்தி பரிசீலித்து அதற்கு உரிய தீர்வுகளை விரைவாக வழங்க வேண்டும். கரூர் மாவட்டத்தில் இதுவரை 30 இடங்களில் நடத்தப்பட்ட மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் மூலம் 14 ஆயிரத்து 38 மனுக்கள் பெறப் பட்டுள்ளன என்றார்.

தொடர்ந்து 83 பயனாளிகளுக்கு ரூ.67.52 லட்சம் மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார்.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161